# தமிழ்நாடு தட்டச்சு - கணிணி பள்ளிகள் சங்கம்

## மாதிரித் தேர்வு - பிப்பரவரி 2022

## 450

## Time : 10 minutes. Max. marks: 100

கீழ்க்கண்டதை இரட்டை வரி இடைவெளியில், பத்து டிகிரி இடதுபுற ஓரம் விட்டு, தட்டச்சு செய்க. (பிழையின்றியும் அழகுறவும் தட்டச்சு செய்வதில் தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும்)

– – –

உடல் நலத்துடன் வாழ்வதே மகிழ்ச்சிக்கு அடிப்படை என்பது நாம் அனைவரும் அறிந்த ஒரு செய்தியாகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது சான்றோர் வாக்கு. உடல் நலத்தைப் பேணுவது இன்றியமையாததாகும். உண்ணும் உணவும், உடுக்கும் உடையும், இருக்கும் இடமும் சுத்தமானதாகவும் சுகாதாரமானதாகவும் இருக்கவேண்டியது அவசியமாகும். நாகரிகத்தின் வளர்ச்சியும், அறிவின் முன்னேற்றமும் இன்று மக்களுடைய வாழ்க்கையை மேன்மையடையச் செய்துள்ளன. நோய்களின் தாக்கம் இப்போது கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. விஞ்ஞான வளர்ச்சியின் உச்சக் கட்டத்தில் இன்று உலகம் இருந்து கொண்டிருக்கின்றது. விஞ்ஞானமும், அறிவு நுட்பமும் மன வளர்ச்சிக்குப் பக்க பலமாக இருந்து பண்பாட்டை வளர்க்க வேண்டும். அப்போது தான் மனித சமுதாயத்தில் முழு வளர்ச்சி ஏற்படும். நம்முடைய நாடு எந்த அளவிற்கு விரிவானதோ, அதே அளவுக்கு நமது பண்பாடும் விரிந்து பரந்துள்ளது. பண்பாட்டின் முக்கிய அம்சங்கள் என்னவென்றால், சகிப்புத் தன்மையும், சூழ்நிலைக்குத் தக்கவாறு தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளும் பாங்கும் ஆகும்.

வாழ்க்கையில் உயர்ந்த நோக்கங்களைக் கடைப்பிடித்து வாழ்வது சிறப்பான ஒரு தன்மையாகும். குறுகிய காலத்தில் பெரிய அளவில் சம்பாதிக்க வேண்டும் என்பது நல்ல எண்ணம் தான். ஆனால் அதனை நேர்மையான முறையில் எட்ட வேண்டும். குறுக்கு வழியில், தீய பழக்கங்களைக் கையாண்டு அடைய நினைப்பது கெடுதலான முடிவினையே அளிக்கும். வணிகர்கள் சிலர், நல்ல தரமான பொருட்களோடு கலப்படப் பொருட்களையும் கலந்து விற்றுவிடுகின்றனர் என்ற குறைபாடு அவ்வப்போது சுட்டிக்காட்டப்படுகிறது. மக்களின் உடல் நலம் கெடுவதற்கு அத்தகைய கலப்பட பொருட்கள் காரணமாக அமைந்து விடுகின்றன. அதுபோல் ஒவ்வொரு துறையிலும் நடவடிக்கைகள் அமைந்தால், யாருக்கும் நல்லதல்ல என்பதை உணர்ந்து நமது செயல்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். அதுவே நல்வாழ்விற்கு சிறந்த வழி.

– – –